O.S.No.145/2019 தேதி – 26.08.2025

பி.வா.சா.2. – அண்ணாமலை

வாதி தரப்பு குறுக்கு விசாரணை –

வழக்குரையில் மொத்தம் 3 அட்டவணை சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளதை பற்றி தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. நான் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்திற்கான விபரங்கள் நான்தான் வழக்கறிஞருக்கு கூறினேன் என்றால் சரிதான். எனது முதல்விசாரணை நிருபண வாக்குமூலத்தில் 1வது அட்டவணை சொத்தில் 4 முதல் 10 அயிட்ட சொத்துக்களில் மட்டுமே எனக்கு 4ல் 1 பங்கு உரிமை உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 3ல் 1 பங்கு உள்ளது. 2வது அட்டவணை மற்றும் 3 வது அட்டவணை சொத்துக்களில் எனக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது. நான் எவ்வித பங்கும் கோரவில்லை. எனது தகப்பனார் மாரியப்ப தேவருக்கு நான் மற்றும் எனது மூத்த சகோதரர்கள் சக்கரைத்தேவர், கணேசன் ஆகியோர்கள் ஆவோம். எனது தகப்பனார் மாரியப்ப தேவர் எந்த வருடம் இறந்தார் என்றால் ராஜிவ்காந்தி இறந்து 15 நாட்கள் கழித்து இறந்தார். எனது அண்ணன் கணேசன் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு இப்போதிலிருந்து 2 வருடங்களுக்கு முன்பு இறந்தார். எனது அண்ணன் சக்கரைத்தேவர் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு இறந்து போனார். எனது தகப்பனார் இறந்த உடனேயே நானும் எனது உடன் பிறந்த சகோதர்களும் தகப்பனாரின் சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் அது தவறு. நாங்கள் கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறோம். நாங்கள் தனியாகத்தான் அனுபவித்து வருகிறோம் என்றாலும், பட்டா மாற்றம் செய்யாமல் கூட்டாக இருப்பதால் நான் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அப்பா சக்கரைத்தேவர் பங்கினை இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான சுந்தரமூர்த்திதான் அனுபவித்து வருகிறார். வழக்குரையில் காட்டப்பட்டுள்ள 3 அட்டவணை சொத்துக்களும், வாதியின் தகப்பனார் சக்கரைத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் எனக்கு எவ்வித உரிமையும், பாத்தியமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதியும், மற்றும் அவர் உடன்

பிறந்த சகோதரிகளுக்கும் நல்ல முறையில் திருமணம் செய்து கொடுத்தால் அவர்கள் திருமணத்தின்போது சொத்துக்களில் பங்கு வேண்டாம் என வாய்மூலமாக விடுதலை கொடுத்துள்ளதால் வாதிக்கு வழக்கிடை சொத்துக்களில் பாகம் கோர உரிமை கிடையாது என்று நான் கூறுகிறேன். வாதியும், அவர் உடன் பிறந்த சகோதரிகளும் வழக்கிடை சொத்துக்களில் பாகம் வேண்டாம் என்று வாய்மொழியாக விடுதலை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி சுந்தரமூர்த்தி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் சக்கரத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வேறு உள்ளது என்றும், அவற்றை வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு Partial Partition நிலைக்கு உள்ளாவதாக நான் சொல்லவில்லை. வாதி முத்துலட்சுமி தாக்கல் செய்த வழக்கு சரியான வழக்குதான் என்றாலும், அவருக்கு வழக்கிடை சொத்துக்களில் 4 ல் 1 பாகம் உள்ளது என்றும், அவர் அதை கேட்டு தாக்கல் செய்த வழக்கு சரியான வழக்குதான் என்று சொன்னால் சக்கரைத்தேவரின் பாகத்தில் அவர் பாகம் கோரலாம்.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.